(3) சனாதிபதியைப் பாராளுமன்றம் தேர்ந்தெடுத்தலுக்கான நடவடிக்கைமுறை பற்றிய எல்லாக் கருமங்களுக்கும், அவற்றுக்கு அவசியமான அல்லது அவற்றின் இடைநேர்விளைவான ஏனைய எல்லாக் கருமங்களுக்கும் சட்டத்தின்மூலம் பாராளுமன்றம் ஏற்பாடுசெய்தல் வேண்டும்.

சனாதிபதியின் பணியாட்டொகுதியினர்.

41. (1) சனாதிபதி, தமது பதவிக்குரிய தத்துவங்களையும், பணிகளையும், கடமைகளையும் பிரயோகிப்பதிலும் நிறைவேற்றுவதிலும் புரிவதிலும் தமக்கு உதவுதற்கு அவசியமானவர்களென அவர் கருதுகின்றவாறான அத்தகைய செயலாளர்களையும், அமைச்சரவையுடன் கலந்தாலோசித்து அத்தகைய வேறு அலுவலர்களையும் பணியாட்டொகுதியினரையும் நியமிப்பதற்கும், அவர்களது சேவை நியதிகளையும் நிபந்தனைகளையும் தீர்மானிப்பதற்கும் தத்துவமுடையவராதல் வேண்டும்.

(2) அத்தகைய செயலாளர்கள், அலுவலர்கள், பணியாட்டொகுதியினர் என்போரின் சம்பளங்கள், திரட்டுநிதியத்தின்மீது பொறுப்பிக்கப்படல் வேண்டும்.

Repealed 17th A.

(3) அத்தகைய செயலாளர்கள், அலுவலர்கள், பணியாட்குதியினர் என்போரைப் பதவி விலக்குதற்கும் அவர்களின் ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டுக்கும் ஆன தத்துவங்கள் சனாதிபதிக்கு உரித்தானவை என்பதைத் தவிர, அத்தகைய செயலாளர்கள், அலுவலர்கள், பணியாட்டொகுதியுறுப்பினர் ஆகியோர் பகிரங்க அலுவலர்களாகக் கருதப்படல் வேண்டும் ; சனாதிபதி, அத்தகைய எவரேனும் அலுவலர்கள் அல்லது பணியாட்டொகுதியுறுப்பினர்கள் தொடர்பில் பதவி விலக்குதற்கும் ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டுக்குமான தமது தத்துவங்களை அத்தகைய எவரேனும் செயலாளருக்குக் கையளிக்கலாம்.

(4) அத்தகைய செயலாளர், அலுவலர் அல்லது பணியாட்டொகுதியுறுப்பினர் ஒவ்வொருவரும், புதிய ஒரு சனாதிபதி பதவியேற்பதன்மேல் பதவிவகிக்காதொழிதல் வேண்டும்.

(5) அத்தகைய செயலாளர், அலுவலர் அல்லது பணியாட்டொகுதி உறுப்பினர் எவரும் அங்ஙனம் பதவிவகிக்காதொழியுமிடத்து, அமைச்சரவை, அத்தகைய செயலாளரை, அலுவலரை அல்லது பணியாட்டொகுதி உறுப்பினரைப் பகிரங்க சேவையிலுள்ள ஏதேனும் பதவிக்கு நியமிக்கலாம்:

ஆயின், செயலாளராக, அலுவலராக அல்லது பணியாட்டொகுதி உறுப்பினராக நியமிக்கப்படுவதற்கு நேர்முன்னர் பகிரங்க சேவையில் அல்லது உள்ளூராட்சிச் சேவையில் அல்லது பகிரங்கக் கூட்டுத்தாபனமொன்றின் சேவையில் இருந்தவரான அத்தகைய எவரேனும் செயலாளர், அலுவலர் அல்லது பணியாட்டொகுதி உறுப்பினர், புதிய ஒரு சனாதிபதி பதவியேற்பதன் மேல், முதுமுறையை இழக்காமல் அத்தகைய சேவையை மீள வகிப்பதற்கு உரித்துடையவராதல் வேண்டும்.